1982 பிப்ரவரி 19]

(ஆ) இதில் ரூ. 5 கோடி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாத்தனூர் அணையிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டும் திட்டம்.

*வினா எண் 273—திரு. சோ. கலித்தீர்த்தான்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையிலிருந்து வலதுபுறம் வாய்க்காலுக்கு மேல்புறம் புதிதாக வாய்க்கால் பாசனத்திற்கு பயன்பட அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) & (ஆ) இத்திட்டம்பற்றி தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. புதிதாக திட்டமிடப்படும் வாய்க்கால் வெட்டும் பணியை, பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தினால், இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று கருதப்படுவதால் பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்தோடு புதிய கால்வாய் வெட்டும் திட்டத்தை இணைத்து அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சோ. கலித்தீர்த்தான்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது ஆய்வு செய்யப்பட்டது. அது என்ன காரணத்தால் தாமதம் ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, நான் என் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். பொன்னை ஆற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல் படுத்தினால் இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கிறோம். மேலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள உபரி நீரை கணக்கில் கொண்டு திட்டத்தை மேற்கொள்வதாக இருந்தால் பருவமழை பொய்த்து அல்லது வேறு காரணங்களினால் அந்தப் பகுதியில் உபரி நீர் கிடைக்கவில்லையானால் திட்டம் பயனற்றதாகிவிடும். பொன்னை ஆற்றின் மேல் பகுதியில் சில நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படுவதால் அதனால் நீர் வரத்து குறைந்துவிடுமா என்பதை எல்லாம் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவரவர்களே, நம்முடைய நாடு விவசாயத்தில் மிகவும் கஷ்டமடைந்துகொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் என்னுடைய தொகுதியாகிய சங்கராபுரம் தொகுதியிலும் தண்டராம்பட்டுத் தொகுதியிலும் சுமார் 50,000 ஏக்கர் பாசன வசதி பெறும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, ஏற்கெனவே திட்டமிட்டபோது 750 மில்லியன் கன அடி தண்ணீர் உபரியாகக் கிடைக்கும் என்றும், 5789 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும் என்றும், 1920 ஏக்கர் நன்செய் நிலம் பாசன உறுதி பெறும் என்றும், 411.3 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு பாசன பற்றாக்குறை நீங்கும் என்றும் வரிவிதித்திருக் கிறார்கள். 470 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது வடாற்காடு மாவட்டத்திலே, அதிலும் குறிப்பாக ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்படும் கராம்பட்டு, தண்டராம்பட்டு பகுதிகளுக்கு நிச்சயமாகப் பயன்படும். ஆகையால்தான் இத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேல் அணையிலிருந்து வலதுபுற கால்வாய்த் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இடதுபுறக் கால்வாய்த் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்தது. இந்தத் திட்டத்தினால் அது பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஒரு திட்டத்தை ஆராயும்போது ஏற்கெனவே இருக்கிற எந்த ஒரு திட்டமும் பாதிக்காது. பொன்னை ஆற்றின் மேல்பகுதியில், தர்மபுரி மாவட்டத்தில் 5 புதிய நீர்த்தேக்கங்களைக்கட்டுகிறோம். அதனால் உபரி நீர் வரத்து குறைந்தால் இந்தக் கால்வாய்த் திட்டம் பயனற்றுப்போகும். அப்படி ஏற்படக்கூடாது என்று முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, இருக்கிற திட்டம் எதுவும் பாதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குள்ளாசெட்டி அணை மராமத்துப்பணி.

*வினா எண் 274—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கருக்கும் எமகல் நத்தத்திற்கும் இடையில் உள்ள குள்ளாசெட்டி அணை பழுது அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?